## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – II – 2005/2006(வெளிவாரி)
### (பெப்ரவரி/மார்ச் 2008)

LIBRARY
02 JUN 2008
Eastern University, Sri Lanka.

## ECO 301 பணப்பொருளியல்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**

01. (அ) ஒரு பொருளாதாரத்தில் பணம் ஆற்ற வேண்டிய அடிப்படைத் தொழிற்பாடுகளை விளக்குக.
(10 புள்ளிகள்)

(ஆ) பணத்திற்கு மக்கள் ஏற்படுத்தும் கேள்வி பற்றி கெயின்ஸின் விளக்கத்தினை சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

02. இலங்கையின் வணிக வங்கி அமைப்பிலும் அதன் செயற்பாட்டிலும் ஏற்பட்டு வந்துள்ள பிரதான மாற்றங்களை அடையாளம் கண்டு மதிப்பிடுக.
(20 புள்ளிகள்)

03. (அ) பொருளாதாரத்தில் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைச் சுருக்கமாகத் தருக.
(10 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் நிதி முறையில், வங்கியில்லா நிதி நிறுவனங்கள் ஆற்றக்கூடிய பணிகளை மதிப்பிடுக.
(10 புள்ளிகள்)

04. "பணநிரம்பல் பற்றிய வரைவிலக்கணமானது இலங்கையின் நிதி முறையில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களுடன் தொடர்புபட்டதாக அமைந்துள்ளது". இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.
(20 புள்ளிகள்)

05. (அ) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் நிதிச்சந்தை ஆற்றும் பங்கு பற்றி மதிப்பிடுக.
(10 புள்ளிகள்)

(ஆ) பணநிரம்பலைக் குறைப்பதற்கு, மத்திய வங்கி திறந்த சந்தை நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என விளக்குக.
(10 புள்ளிகள்)

06. “சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றின் நோக்கங்கள் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளை நிதி நெருக்கடியிலிருந்து பாதுகாப்பதாகும்”. இக்கூற்றுக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துரைக்குக.
(20 புள்ளிகள்)

07. பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளை விளக்குக.
(20 புள்ளிகள்)

08. பின்வருவன பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
i. உயர்வலுப் பணம் (High Powered money)
ii. நுண்பாக நிதியியல் (Micro Finance)
iii. வங்கிகளில் இடர் முகாமைத்துவம் (Risk Management in Banks)
iv. இலத்திரனியல் பணம் (E – cash/ Money)

*************